முற்பகல் 11-50

4. கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்)*

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சவுந்தரராசன், இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள், அது என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளில் இதே மாமன்றத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. இன்றுதான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்ன?*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் என்னவென்று பார்க்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றே இதுகுறித்து பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார், என்ன?*